செ.வெ.எண் 26 நாள் 7-01-2010

# பத்திரிகைச் செய்தி

தமிழ்நாடு எழுத்தறிவு முனைப்பு ஆணைய பொதுக்குழுக் கூட்டம் சென்னையில் அனைவருக்கும் கல்வி இயக்கக மாநாட்டு அரங்கம், டி.பி.ஐ.வளாகம், சென்னை–6ல் 07.01.2010 பிற்பகல் 3.15 மணியளவில் மாண்புமிகு.தமிழக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் தமிழகஅரசு தலைமைச் செயலர், மாநகராட்சி மேயர், சட்டமன்ற உறுப்பினர்கள், நகராட்சி, ஊராட்சி மன்றத் தலைவர்கள், மைய, மாநிலஅரசு உயர் அலுவலர்கள், பல்கலைக் கழக துணை வேந்தர்கள், சமூக ஆர்வலர்கள், கல்வியாளர்கள் மற்றும் தகவல் தொடர்பு அலுவலர்கள் கலந்து கொண்டு விவாதிக்க உள்ளனர்.

இதுவரை நடைபெற்று வந்த வளர்கல்வித் திட்டத்தின் மூலம் தமிழகத்தில் 52,58,899 பேர் பயனடைந்துள்ளனர். தற்போது தமிழகத்தின் எழுத்தறிவு நிலை 78.26 சதவிகிதத்திற்கு உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும் வளர்கல்வித் திட்டம் 30.9.2009 உடன் மைய அரசினால் முடித்து வைக்கப்பட்டது.

தேசிய எழுத்தறிவு முனைப்பு ஆணையத்தால் “ சக்ஷார் பாரத் ” என்ற புதிய எழுத்தறிவுத் திட்டம் உலக எழுத்தறிவு நாளான 8.9.2009 அன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தேசிய அளவில் எழுத்தறிவில் 50 சதவிகிதத்திற்கும் குறைவாக உள்ள 370 மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு குறிப்பாக கிராமத்தில் வசிக்கும் 15 வயதிற்கு மேற்பட்ட வயதினரில் எழுத்தறிவற்ற பெண்களுக்கு முன்னுரிமை அளித்து 2012 க்குள் 70 மில்லியன் பேர் பயனடையும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டம் தமிழகத்தில் 7 மாவட்டங்களில் ( ஈரோடு, பெரம்பலூர், சேலம், விழுப்புரம், தருமபுரி, அரியலூர் மற்றும் திருவண்ணாமலை ) ரூ.125 கோடி மைய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும் மத்திய, மாநில அரசுகள் 75:25 விகிதாச்சாரத்தில் நிதியை பகிர்ந்து கொள்ளும் வகையில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் மாண்புமிகு.தமிழக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் தலைமையுரையாற்றிடவும், பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலர் திரு.ம.குற்றாலிங்கம் .இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரையாற்றிடவும் பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்குநர் திருமதி.ம.இலட்சுமி அவர்கள் நன்றியுரையாற்றிடவும் உள்ளார்கள்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9